நாமக்கல் ஒன்றியத்தில் உள்ளாட்சி தின சிறப்பு கிராம சபைக் கூட்டம்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. - ஆட்சியர் உமா - பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், நவ.6-

நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் என்.நளங்கிள்ளி தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களுக்கும், சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் மகளிர் சுய உதவிக் குழுவினரை பாராட்டி கூற வைத்தார். மேலும், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், இணையவழி வீட்டுவரி / சொத்துவரி செலுத்துதல், டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு, 18 வயதிற்கு மேல் உள்ள புதிய வாக்காளர் சேர்க்கை முகாம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பேசும் போது, உள்ளாட்சி தினத்தையொட்டி மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகையாக வழங்கிடும் வகையில் 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம்.

மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

எனவே தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கும். அதோடு மட்டுமல்லாமல் இத்திட்டம் என்பது ஒரு தொடர் திட்டம் என்பதால் வருடந்தோறும் தகுதியுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் இலவச காலை உணவு வழங்கிடும் வகையில் முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தன் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரவா உப்பமா, பொங்கல், சாம்பார் சாதம், கிச்சடி உள்ளிட்டவை தரமான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. அதே போன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் நகை கடன், மகளிர் சுய உதவிக்குழு கடன்களை தள்ளுபடி செய்துள்ளார். இவ்வறாக இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. சமுதாயக்கூடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதே போன்று உயர்மின் கோபுர விளக்கு நாமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வறாக மாரப்பநாயக்கன்பட்டி ஊராட்சிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றப்படும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மகளிர் திட்ட இயக்குநர் மா.பிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) க.அசோக்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் கழகத் தலைவர் அவர்கள் மீது பற்று மிக்கவர் திருவாரூர் பகுதியின் கழக மூத்த முன்னோடி, அண்மையில் மறைந்த பெரியவர் புலிவலம் ஆர்.பி.சுப்பிரமணியன் அவர்களின் திருவுருவப்படத்தை திருவாரூர் விளமல் பகுதியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள். சுப்பிரமணியன் குடும்பத்தினர் உள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில்

"நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபாதைத் திட்டம்!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார்!

நாமக்கல். நவ.6-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்48, இதயம் காப்போம், சிறுநீரக பாதுகாப்பு திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் மிகச்சிறப்பான வகையில் பொதுமக்கள் நலன் கருதி செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பொதுமக்கள் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் நடைபயிற்சி மேற்கொள்வதற்காக 8 கி.மீ தூரம் நடைப்பாதை கண்டறியப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் துவங்கி மோகனூர் சாலை வழியாக டிரினிட்டி கல்லூரி வரை சென்று திரும்பவும் நாமக்கல் அரசு (தெற்கு) மேல்நிலைப் பள்ளியில் வந்தடையும் வண்ணம் 8 கிலோமீட்டர் தொலைவிற்கு "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபாதை திட்டத் துவக்க விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு இத்திட்டத்தை துவக்கி வைத்து பேசினார். அப்போது, உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி 10,000 அடிகள் அதாவது 8 கி.மீ நடப்பதால் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்கள் 28 சதவீதமும், இதயநோய் தாக்கம் 30 சதவீதமும் குறைகின்றது என்று அறியப்படுகிறது. நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சனைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது. இந்த நடைப்பயிற்சி சிறியவர்கள் முதல் முதியோர்கள் வரை அனைத்து தரப்பினருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மேலும், இப்பகுதியை வாரத்தின் அனைத்து நாட்களும் நடைபயிற்சிக்கு பயன்படுத்தி "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் நோக்கில் அனைவருக்கும் நலவாழ்வு பேணுவதற்கான நடைப்பயிற்சி பிரதி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும். இத்திட்டத்தை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி உடல் நலத்தை பேணி காக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நடைபயிற்சியில் நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ராஜ்மோகன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.ச.பூங்கொடி, மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.கோகிலா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் முருகன் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டனர் .

மேல்மலையனூர் ஒன்றியம் - கடலி ஊராட்சியில் ரூ.31.54 லட்சம் மதிப்பீட்டில்

புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடை,மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி!

மக்கள் பயன்பாட்டிற்கு. அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்

விழுப்புரம், நவ.6-

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கடலி ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 12.30 மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடையும்,ஜல்ஜீவன் மிஷன் சேமிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ19.24லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த் தேக்கதொட்டி கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மைனர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையும் மேல்நிலை நீர் தேக்க தொட்டியும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.முன்னதாக கால் நடை துறை சார்பில் நடைபெற்ற இலவச கால்நடை சிகிச்சை முகாமை அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்து கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசிகளை செலுத்திசிறப்பாக கிடாரி கன்றுகளை வளர்த்த கால் நடை உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் விஜய லட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன்,வட்டாட்சியர் முகமது அலி, கால்நடை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலோத்துங்கன், சரவணகுமார், கூட்டுறவு கார் பதிவாளர் ரூபன் கென்னடி, செஞ்சி விவசாய கூட்டுறவு வங்கி செயலாளர் பழனி,ஒன்றிய கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், சியாமளா ஜெய்சங்கர், நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத், கெங்கபுரம் ராஜா, சரவணன், தோப்பு சம்பத், மாணவரணி ஆறுமுகம், இளைஞரணி மணிகண்டன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முஹம்மது யூசப் அலி, நிர்வாகிகள் சுந்தர், ராசேந்திரன், ஜெய்சங்கர், முஜீர்,சசி, மணிகண்டன், நிஜாம் கலந்து கொண்டனர்.